# பொருளாதார நெருக்கடியால் வீழ்ச்சியடையும் வாழ்க்கைத்தரத்தில் பணக்கூலியின் பங்கும் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சமாளிக்கும் உத்திகளும் : யஹலவெல கிராமசேவகர் பிரிவில் ஸ்பிரிங்வூட் தோட்டத்தை உட்படுத்திய ஆய்வு


**சரோஜினி, J., கமலக்குமாரி, க.**

பொருளியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

sarojinijeyakumar1997@gmail.com



*இலங்கையானது சுதந்திரம் அடைந்த பிறகு எதிர்க்கொள்ளும் மிக மோசமான பொருளாதார நெருக்கடியாக நாட்டில் தற்போது நிலவிய பொருளாதார நெருக்கடி காணப்படுகின்றது. பொருளாதார நெருக்கடி என்பது நிதி நெருக்கடியின் விளைவாக நாடு அனுபவிக்கும் சடுதியான பொருளாதார வீழ்ச்சியும் அதன் பரவல் விளைவுகளும் ஆகும். இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கை வாழ் மக்கள் அனைவரும் பெரும் பாதிப்பை எதிர் கொண்டுள்ளனர். குறிப்பாக பெருந்தோட்ட மக்கள் அதிகமாக பாதிப்பை எதிர் கொண்டுள்ளனர். இந் நிலைக்கான பிரதான காரணம் அவர்களது கூலியாகும். பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் அவர்களது கூலியானது மாறாத நிலையில் காணப்பட வாழ்க்கைச்செலவுகள் அதிகரித்தும் காணப்படுகின்றன. இவ் ஆய்வின் நோக்கமானது பொருளாதார நெருக்கடிக்கு பின்னர் இரத்தினபுரி மாவட்டத்தில் இறக்குவானை பிரதேசத்தில் உள்ள யஹலவெல கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட ஸ்ப்ரிங்வூட் பெருந்தோட்ட குடும்பங்களின் மாறாத கூலியினால் வாழ்க்கைத்தரம் வீழ்ச்சியடையும் நிலை பற்றியும் வீழ்ச்சியடையும் வாழ்க்கைத்தரத்தை தொடர்ந்தும் நிலையாக வைத்துக் கொள்ள மேற்கொள்ளும் உத்திகளை கண்டறிவதாகவும் காணப்படுகின்றது. இங்கு ஒழுங்கமைக்கப்பட்ட எழுமாற்று மாதிரி அடிப்படையில் 66 மாதிரிகள் ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்டதுடன் தரவுகள் முதலாம் நிலைத் தரவுகள், இரண்டாம் நிலைத் தரவுகள் என்ற அடிப்படையில் திரட்டப்பட்டன. முதலாம் நிலை தரவுகள் நேரடி அவதானம், வினாக் கொத்து, கலந்துரையாடல் என்பவற்றின் மூலமும் இரண்டாம் நிலைத் தரவுகள் பெருந்தோட்டத்துறை தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையத்தளம், சம்பள பட்டியல்கள், கிராம சேவகர் பதிவேடுகள், முன்னர் செய்யப்பட்ட ஆய்வுகளின் மீளாய்வுகள் என்பவற்றைக் கொண்டும் திரட்டப்பட்டன. பொருளாதார நெருக்கடிக்கு பின் பெருந்தோட்டத்துறை தொழிலாளர்களின் மாறாத கூலியால் வாழ்க்கைத்தரம் வீழ்ச்சியடைந்து செல்கின்றது மற்றும் வீழ்ச்சியடையும் வாழ்க்கைத்தரத்தை நிலையாக வைக்க சமாளிக்கும் உத்திகளை கையாளுகின்றனர் என்ற கருதுகோள்களை நிரூபிக்க SPSS மென் பொருளினூடக விபரண பகுப்பாய்வு முறை,* PAIRED SAMPLE T TEST, *வரைபடங்கள், அட்டவணைகள் என்பன பயன்படுத்தப்பட்டன. வாழ்க்கைத்தரத்தை அளவிட பெருந்தோட்ட மக்களின் உணவு, கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, எதிர்பாராத செலவுகள், வீட்டுச்செலவுகள் என பல்வேறு காரணிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இறுதியாக ஆய்வின் முடிவு பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர் பெருந்தோட்ட தொழிலாளர்களின் வாழ்க்கைத்தர வீழ்ச்சிக்கு மாறாத பணக்கூலி காரணம் என்பதுடன் வாழ்க்கைத்தரத்தை தக்கவைத்துக்கொள்ள பெருந்தோட்ட மக்கள்*